


ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி
ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகள்



श्रीः

श्रीमत्परमहंस परिव्राजकाचार्य
श्रीमच्छंकर भगवत्पाद प्रतिष्ठित
श्रीकाञ्ची कामकोटि पीठाधीश्वर
श्रीचन्द्रशेखरेन्द्र सरस्वती श्रीपादैः

नारायणस्मृतिः

ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகள்
அவர்களால் 1955ல் கொடுக்கப்பட்ட ஸ்ரீமுகம்

# முன்னுரை

(ஆலங்குடி K. வெங்கடநாராயணய்யர்)

ஆலங்குடி ஸ்ரீ ஸ்வயம் பிரகாசாநந்த ஸரஸ்வதி ஸ்வாமிகள் அவர்கள் தன்னுடைய தளர்ந்த வயதில் முடிகொண்டான் கிராமத்தில் சுமார் 1½ வருஷ காலம் வாஸம் செய்தார்கள். ஸ்ரீ ஸ்வாமிகளை அசக்தமான நிலையில் சிரத்தையுடன் வைத்துக்கொண்டு ஆராதித்த பெருமையும் பாக்யமும் முடிகொண்டான் கிராமவாசிகளுக்குத்தான் கிடைத்தது. முதிர்ந்த நிலையிலும் ஸ்ரீ ஸ்வாமிகள் தினமும் வேதாந்த பாடம் நடத்திக்கொண்டிருந்தார்கள். ஸ்ரீமத் பாகவத பிரவசனமும் நடந்துகொண்டிருக்கும். அப்போது நான் முடிகொண்டான் கிராமத்தில் ஸம்ஸ்கிருதம் வாசித்துக் கொண்டிருந்த காலம். ஸ்ரீ ஸ்வாமிகளுடைய முக்ய சிஷ்யர்களில் ஒருவரான எனது தகப்பனார் பிரம்மஸ்ரீ கோதண்டராமய்யர் அவர்களுடன் கூட அடிக்கடி ஸ்ரீ ஸ்வாமிகளை தரிசனம் செய்யும் பாக்யம் எனக்கு ஏற்பட்டது. என் வயது நிலையை அனுஸரித்து ஸ்ரீ ஸ்வாமிகளுடன் நெருங்கி பழகவும் கொஞ்சம் சுச்ரூஷை செய்யவும் பாக்யம் அந்த நாளில் எனக்கு கிடைத்தது என் பூர்வ ஜன்ம புண்யமென்றே நினைக்கிறேன்.

ஸ்ரீ நரஸிம்ஹ மூர்த்தியை தீவிரமாய் உபாஸித்த மகான் சென்ற யுவ-ஹு வைகாசி-மீ 4-வ சுக்லபக்ஷ சதுர்தசி திதியில் (17—5—1935) (ஸ்ரீநரஸிம்ஹ ஜயந்தி தினம்) பிரும்ஹீ பூதர்களானார்கள். ஸ்ரீ ஸ்வாமிகளுடைய அபிப்பிராயப் படியே பூர்வாசிரமத்தில் ஸ்ரீ ஸ்வாமிகளுடைய ஸஹபாடிகளான ஆலங்குடி பிரம்மஸ்ரீ குப்புஸாமி தீக்ஷிதர் அவர்களுடைய குமாரர் K. ராமஸ்வாமி அய்யர் அவர்களைக் கொண்டு யதிஸம்ஸ்காராதி காரியங்களை முடிகொண்டான் கிராமவாஸிகள் ஆங்காங்குள்ள பல சிஷ்யகோடிகளுடைய ஆதரவுடன் வெகு விமரிசையாக நடத்திவைத்தார்கள். பிறகு ஸ்ரீ ராமஸ்வாமி அய்யர் அவர்கள் பதினேரு வருஷ காலம் வரை (1946 வரை) தன் சொந்த பொறுப்பில் பிரதி வருஷமும் சிரார்த்தம் ஆராதனை முதலியவைகளை சிரத்தையுடன் நடத்திவந்தார்கள்.

1947-ல் ஆராதனையை கொஞ்சம் விஸ்தாரமாக நடத்தும்படி எனக்கு ஸ்வப்பனத்தில் ஸ்ரீ ஸ்வாமிகளுடைய ஆக்ஞை கிடைத்தது. ஸ்ரீ ஸ்வாமிகளுடைய தபோபலத்தை பக்கபலமாகக் கொண்டு இந்த புனிதமான கைங்கர்யத்தில் ஈடுபட்டிருக்கிறேன். ஸ்ரீ ஸ்வாமிகள் சம்பிரதாயமாக வாஸம் செய்துவந்த பல சிஷ்ட கிராமங்களுக்கு சென்று விஷயத்தை பிரஸ்தாபித்ததில் பல சிஷ்யகோடிகளுடைய ஆதரவு கிடைத்தது. 12-வது ஆராதனை முதல் ஒவ்வொரு வருஷமும் மேன்மேலும் அபிவிருத்தியாக நடந்துகொண்டு வருகிறது. சென்ற ஜய-ஹு 5 நாள் உத்ஸவமாக நடத்தப்பட்ட 19-வது ஆண்டு ஆராதனா மகோத்ஸவம் நான்கு வேத பாராயணங்களுடனும், தினமும் உபன்யாஸங்களுடனும் விமரிசையாக நடத்தப்பட்டது.

இவைகளுக்கு எல்லாம் காரணம் அபரிச்சின்னமாய் எங்கும் நிறைந்து விளங்கும் ஸ்ரீ ஆலங்குடி ஸ்வாமிகளுடைய பரிபூர்ண அனுக்ரஹமும், லோக குருவாய் பிரகாசிக்கும் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகளுடைய அனுக்ரஹமும், ஸ்ரீ ஸ்வாமிகளுடைய மகிமையை அறிந்த பல சிஷ்யகோடிகளுடைய ஆதரவும், ஆலங்குடி ஸ்ரீ ராமஸ்வாமி அய்யர் அவர்களுடைய ஒத்துழைப்புமே யாகும்.

என்னுடைய பிரார்த்தனைக்கு இணங்கி இந்த சரித்திரத்திற்கு ஸ்ரீமுகம் எழுதிக்கொடுத்து அனுக்ரஹம் செய்த ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகள் அவர்களுடைய திவ்ய சரணாரவிந்தங்களில் என் நமஸ்காரங்களை ஸமர்ப்பித்துக்கொள்கிறேன்.

ஸ்ரீ ஸ்வாமிகளுடைய சரித்திரத்தை புஸ்தக ரூபமாய் வெளியிடவேண்டுமென்ற என் விருப்பத்திற்கிணங்கி சுருக்கமாய் சரித்திரத்தை கூறும் ஸம்ஸ்கிருத சுலோகங்களை தமிழ் அர்த்தத்துடன் எழுதிகொடுத்த ஆனந்த தாண்டவபுரம் ஸ்ரீ P. ராமதாஸன் அவர்களுக்கும், இதற்கு முகவுரை எழுதி கொடுத்த கும்பகோணம் டாக்டர் ஸ்ரீ R. மகாலிங்கய்யர் அவர்களுக்கும், ஸ்ரீ ஸ்வாமிகளுடைய மஹிமையை விளக்கும் முக்ய சரித்திர குறிப்புகளை எழுதிகொடுத்த காமாக்ஷிபுரம் பிரம்மஸ்ரீ பாகவதரத்ன ஸ்வாமினாத சாஸ்திரிகள் அவர்களுக்கும், சேங்காலிபுரம் வைதீக தர்மரக்ஷக பிரம்மஸ்ரீ அனந்தராம தீக்ஷிதர் அவர்களுக்கும், ஆனந்த தாண்டவபுரம் பிரம்மஸ்ரீ பட்டாபிராமய்யர் அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

எல்லா ஆஸ்திக சிஷ்யகோடிகளும் பிரதி வருஷமும் ஆராதனை மகோத்ஸவத்தை மேன்மேலும் அபிவிருத்தியுடன் நடத்திக்கொடுத்து ஸ்ரீ ஸ்வாமிகளுடைய பரிபூர்ண கிருபைக்கு பாத்ரர்களாகும்படி கேட்டுக்கொள்கிறேன்.

---

உ

ஸ்ரீராமஜெயம்

# முகவுரை

[கும்பகோணம் டாக்டர் ஸ்ரீ R. மகாலிங்கய்யர் அவர்களால் எழுதப்பட்டது]

ஆலங்குடி பெரியவாள் என்று பிரசித்தமான **ஸ்ரீஸ்வயம் பிரகாசானந்த ஸரஸ்வதி ஸ்வாமிகளை** தரிசிக்கும் பேறு எனக்கு முதன் முதலில் 1930-ல் கிடைத்தது. அந்தப் பெரியாருக்குக் கண்கள் தெரியவில்லை என்று சிகித்ஸை அளிப்பதற்காக என் நண்பர்கள் என்னை இவ்வூர் பக்தபுரி அக்ரஹாரம், மல்லபுரம் ஸ்ரீ வெங்கடராமய்யரின் கிருஹத்தில் தங்கியிருந்த பெரியவாளிடம் அழைத்துச் சென்றார்கள். ஒரு பெரியவாளுக்கு சிகித்ஸை செய்து அவர்களுக்கு உபகாரம் செய்யப்போகிறோம் என்ற கர்வத்துடன் சென்றேன். ஆனால் அவர்களை அணுகினதும் என் கர்வம் மறைந்து அவர்களுக்கு சேவை செய்யும் பாக்யம் கிட்டவேண்டுமேயென்ற ஏக்கம்தான் உண்டாயிற்று. இரண்டு கண்களும் தெரியாத வயோதிகாளான பெரியவாள் தமது நியம நிஷ்டை, நித்ய கர்மானுஷ்டானங்களுக்குக் கொஞ்சமும் பங்கமில்லாத முறையில் சிகித்ஸை செய்து கொள்ள வேண்டும் என்றும், தம் ஆசாரங்களுக்குத் தடை கொஞ்சம் ஏற்படுவதாயிருந்தாலும் அதைவிட கண்ணில்லாமல் இருப்பதே உயர்ந்தது என்றும் கருதினார்கள். இவ்வளவு பெரிய சிரத்தாசீலருக்குக் கண் வைத்தியம் செய்யும் பாக்யம் எனக்குக் கிடைத்தது. அப்பொழுது தான் சொந்தமாக ஆரம்பிக்கப்பட்டிருந்த என் வைத்திய சாலையில் முதன்முதலாக நான் சஸ்திர சிகித்ஸை செய்தது இந்தப் பெரியவாளுக்குத்தான். என்னிடம் சிகித்ஸை செய்துகொண்டதானது அவதார புருஷர்களான இப்பேர்ப்பட்ட பெரியவர்களுக்கு உள்ள இயல்பு காரணமாக அவர்கள் வலுவில் வந்து என்னை ஆசீர்வதித்து அநுக்கிரஹித்த பெருங் கருணையென்றுதான் நினைக்கிறேன்.

ஆலங்குடி பெரியவாளுடன் பழகுவதில் ஒரு தனி மனச்சாந்தியும் களிப்பும் ஏற்படும். எல்லோருடனும் சிறு குழந்தையைப்போல் ஸரளமாகப் பழகுவார்கள். பாகவதம் சொல்லுவதில் அவர்களுக்கு ஒரு தனி ஸந்தோஷம். சிறு குழந்தைகளும் புரிந்துகொள்ளுமாறு எளிய நடையில் சொல்லுவார்கள். ஆயுர்வேத சாஸ்திரத்திலும் அவர்களுக்கு நல்ல ஞானமுண்டு. ஸந்நியாஸ ஆச்ரமத்தில் நெறி தவறாது நடந்த மகான். முற்றும் துறந்த முனிவர் என்றால் மிகையாகாது. அவர்களை தரிசனம் செய்யும் பாக்யம் கிடைத்தவர்களுக்கு அவர்களுடைய தேஜோமயமான முகமும் கருணை நிறைந்த கண்களும் எப்பொழுதும் மனக்கண் முன் தோன்றும்.

இந்த ஜிதேந்திரியரின் ஆராதனையைப் பெரும் பொறுப்புடனும் உத்ஸாகத்துடனும் ஆண்டுதோறும் நடத்தி வரும் ஸ்ரீ A. K. வெங்கடநாராயணய்யரின் விருப்பத்திற்கிணங்க ஆனந்ததாண்டவபுரம் ஸ்ரீ ப. ராமதாஸ் அவர்கள் பெரியவாளின் சரிதத்தை ஸ்தோத்திர ரூபமாக பன்னிரண்டு ஸ்லோகங்களில் ஸ்வல்ப ஸம்ஸ்க்ருத ஞானமுள்ளவர்களும் படித்தறிந்து பாராயணம் செய்யும்முறையில் எழுதியிருக்கிறார்கள். இந்த நூலை எல்லோரும் பாராயணம் செய்து பெரியவாளுடைய அநுக்ரஹத்திற்குப் பாத்திரர்களாகவேண்டும் என்று விரும்புகிறேன்.

இந்த மகானுக்கு அநேக காலம் சேவை செய்த புண்ய சீலர்கள் பலரிருக்க ஸ்ரீ வெங்கடநாராயணய்யர் எனக்கு இந்த நூலுக்கு முன்னுரை எழுதும் பாக்யம் கிடைக்கச் செய்ததும் இந்தப் பெரியவாளின் கருணைதான் போலும்! அவருக்கு என் நன்றி.

---

ओं

श्री गुरुभ्यो नमः

## ஸ்ரீ ஸ்வயம் பிரகாசானந்த ஸரஸ்வதி ஸ்வாமிகள் சரிதம்

[ஆனந்த தாண்டவபுரம் ஸ்ரீ P. ராமதாஸன் அவர்களால் எழுதப்பட்டது]

नृसिंहगाथापरवाग्विभूतेस्तुर्याश्रमप्राप्तिपवित्रमूर्तेः ।
स्मरामि योगीन्द्र नितान्तशान्तस्वान्तस्य कान्तं भवतश्चरित्रम् ॥ १

आलङ्कुडिग्रामवरे पवित्रे नारायणार्याद्भवता द्विजाग्र्यात् ।
तनूरवाप्ता किल रामकृष्णनामाऽभिरामा चरमा तनूनाम् ॥ २

श्रुतिस्सहाङ्गैर्भवते सुतेजाः ! समर्पिता प्राथमिकाश्रमेण ।
कन्या च काचित्सुगुणा भवन्तं चक्रे द्वितीयाश्रमसौख्यभाजम् ॥ ३

रायः कलत्रं पशवस्सुताद्या वन्धाय मर्त्यस्य न हि प्रियाय ।
इतीव देवो दयया भवन्तं तेनेऽचिरात्तादृशवन्धहीनम् ॥ ४

---

யோகீந்த்ர! பகவான் நாஸிம்ஹனுடைய கதையிலேயே ஈடுபட்டிருக்கும் வாக்குவன்மை படைத்தவரும், ஸந்யாஸ ஆச்ரம ஸ்வீகாரத்தால் பவித்ரமான சரீரத்தை உடையவரும், மிகவும் சாந்தமான மனதுடன் கூடியவருமான (மனம், வாக்கு, காயம் மூன்றிலும் பரிசுத்தராகிய) தங்களுடைய அழகிய சரிதத்தை நினைத்துப் பார்க்கிறேன். பாவனமான ஆலங்குடி என்னும் உயர்ந்த கிராமத்தில் நாராயணார்யர் என்ற பிராமணோத்தமரிடமிருந்து, தங்களால், ராமகிருஷ்ணன் என்று பெயர்கொண்ட சரீரம் அடையப்பட்டதல்லவா? அந்த அழகிய சரீரம்தான் தங்களுடைய சரீரங்களுக்குள் கடைசி சரீரம். அழகிய காந்தியுடையவரே! பிரம்மசர்ய ஆச்ரமம் தங்களிடம் வேதத்தையும், அதன் அங்கங்களை (சிக்ஷை, வியாகரணம் முதலியவற்றை)யும் ஸமர்ப்பித்தது. பிறகு நற்குணங்கள் பொருந்திய பெண் ஒருத்தி தாங்கள் கிருஹஸ்தாச்ரம ஸௌக்கியங்களை அனுபவிக்குமாறு செய்தாள். பணம், பெண்சாதி

एकान्तभक्तो भगवत्यनन्ते स्वल्पेऽपि तुष्टस्स्वयमागतेऽर्थे ।
संसारभोगेषु भवान् विरक्तो मतिं दधे मस्करितामवाप्तुम् ॥ ५

यस्मिन् प्रभाते भवता प्रतस्थे संप्राप्तुकामेन गुरुं स्वकीयम् ।
तदेव जातं भवतोह्यविद्यारात्रेरपि श्रीहरणं प्रभातम् ॥ ६

पनङ्गुडिश्रीचरणैरुदारैर्भवांस्तदा न्यासितसर्वकर्मा ।
लेभे महादेवयतीश्वरेभ्यो ज्ञानं महावाक्यसमूहजन्यम् ॥ ७

एवं महादानपुरे स्वकेऽष्टाविंशे वयस्याश्रितपारहंस्यः ।
भवान् प्रशान्तःकिल बालकृष्णानन्दादिसत्सङ्गसुखो व्यचारीत् ॥ ८

---

பசுக்கள், பிள்ளைகள் முதலியனவெல்லாம் மனிதனுக்கு பந்தத்தை உண்டுபண்ணுபவையே யல்லாது ஸுகத்தைக் கொடுப்பவையல்ல (ஸ்ரீமத்பாகவதம் 7 7.39) என்பதால் போல பகவான் சீக்கிரமாகவே தங்களை அத்தகைய பந்தங்கள் இல்லாதவராகச் செய்துவிட்டார்.

பகவான் விஷ்ணுவிடம் ஊன்றிய பக்தி நிரம்பியவரும், தானாகக்கிடைத்த பொருளில் — அது ஸ்வல்பமாக இருந்த போதிலும் — போதுமென்ற மனப்பான்மையுடையவரும், ஸம்ஸார போகங்களில் விரக்தியடைந்தவருமான தாங்கள் ஸன்யாஸ ஆசிரமத்தை அடைய விரும்பினீர்கள். ஒரு நாள் விடியற்காலையில் தாங்கள் குருவை அடைய விரும்பியவராய் (வீட்டைவிட்டுப்) புறப்பட்டீர்கள். அந்த விடியற்காலையே தங்களுடைய அவித்யை என்னும் இரவின் சோபையைக் குலைக்கும் விடியற்காலையாகவும் ஆகிவிட்டது. பனங்குடி ஸ்வாமிகளவர்கள் தங்களுக்கு ஸர்வகர்மஸன்யாஸத்தைச் செய்துவைத்தார்கள். பிறகு மகாதேவாச்ரமியவர்கள் தங்களுக்கு மகாவாக்யோபதேசம் செய்தார்கள். இவ்வாறு மகாதானபுரத்தில் தனது இருபத்தெட்டாவது வயதில் பரமஹம்ஸாச்ரமத்தையடைந்து, மிகுந்த மனச்சாந்தியைப் பெற்ற தாங்கள், பாலகிருஷ்ணானந்தஸ்வாமிகள் முதலிய ஸாதுக்களுடைய ஸங்கத்தால் ஆனந்தபரிதர்களாய் தேச ஸஞ்சாரம் செய்தீர்கள். வேதாந்த விசாரம் செய்தீர்கள்.

भवन्निवासाद्बहवो बभूवुर्ग्रामाः प्रवाचां वर! चोलदेशे ।
स्वधर्मसंसक्तसमस्तलोकास्सदाचलद्भागवतप्रवाकाः ॥ ९

कदाऽपि नक्रश्चरणे गृहीत्वा स्वयं भवन्तं विमुमोच सद्यः ।
किं वाऽन्यदीशीत गजेन्द्रबन्धुप्रिये भवत्यात्मरते स कर्तुम् ? १०

शान्तस्य वैकुण्ठकथानुरक्तचित्तस्य सेवा भवतो यतीन्द्र ।
बभूव लभ्या पुरुपुण्यहेतुर्बहून् किलाब्दान् गृहिणां बहूनाम् ॥ ११

गुरुवर मुडिकोण्डानग्रामवर्ये युवाब्दे
वरनृहरिजयन्तीवासरे पूतपूते ।
निरुपमसुखरूपं संप्रपेदे भवान् श्री-
नृहरिमयमनन्तं ब्रह्म तत्स्वप्रकाशम् ॥ १२

---

பேச்சாளர்களுக்குள் சிறந்தவரே! தாங்கள் சோழ நாட்டிலுள்ள அநேக கிராமங்களில் வாஸம் செய்தீர்கள். அங்கெல்லாம் ஜனங்கள் எல்லோரும் ஸ்வதர்மத்தில் பற்றுள்ளவர்களாக ஆயினர். எப்போதும் ஸ்ரீமத்பாகவத பிரவசனம் நடந்துகொண்டே இருந்தது. ஒருசமயம் முதலையொன்று தங்கள் காலைப்பற்றிவிட்டு சீக்கிரமே தானாகவிட்டுவிட்டது. கஜேந்திரனைக் காப்பாற்றிய பகவானுடைய பக்தரும், ஆத்மநிஷ்டருமாயுள்ள தங்களிடம் அது (சரணங்களைப் பற்றுவதைத்தவிர) வேறென்ன செய்யமுடியும்? சாந்தரும், பகவான் வைகுண்டனுடைய கதையில் பிரேமை கொண்ட மனதையுடையவருமான தங்களுக்கு ஸேவை செய்யும் பாக்யம், அநேக வருஷ காலம், அநேக கிருஹஸ்தர்களுக்குக் கிடைத்தது. ஸுலபமான தங்கள் ஸேவையால் கிடைக்கும் புண்ணியம் மிகப்பெரிதல்லவா! குரு சிரேஷ்டரே! முடிகொண்டானென்னும் சிறந்த கிராமத்தில், யுவ வருஷத்தில், பரமபவித்ரமான நரஸிம்ஹ ஜயந்தி தினத்தில் (ஸ்வயம்பிரகாசானந்தஸரஸ்வதியாகிய) தாங்கள் ஸ்வயம்பிரகாசமானதும், இணையற்ற ஆனந்த வடிவமாயுள்ளதுமான, நரஸிம்ஹமாம் முடிவில்லா பிரம்ஹத்தை அடைந்தீர்கள்.

---



ஸ்ரீ ஆலங்குடி ஸ்வாமிகள் (சுமார் 50 வயதில்)



ஸ்ரீ ஆலங்குடி ஸ்வாமிகள் வேப்பத்தூரில் சிஷ்யர்களுடன்



ஸ்ரீ ஆலங்குடி ஸ்வாமிகள் முக்தி அடைந்த இடம், முடிகொண்டான்

श्रीगुरुभ्यो नमः

# ஸ்ரீ குரு மகிமை

[ ஸ்ரீ பாகவத ரத்ன காமாக்ஷிபுரம் ஸ்ரீ ஸ்வாமிநாத சாஸ்திரிகள் அவர்களால் எழுதப்பட்டது ]

स्वयंप्रकाशं मम सुप्रकाशं ह्याकाशसाम्यं गतमप्रमेयं ।
काषायदण्डोज्वलितोर्ध्वपुण्ड्रं स्वाचार्यवर्यं शरणं प्रपद्ये ॥

இப்பேர்ப்பட்ட ஸர்வோத்தமர்களான யதிந்திராள் அவர்களுடைய சுமார் 29-வயது பிராயத்தில் உத்தர காவேரி தீரத்திலிருக்கும் வடரங்கம் என்ற க்ஷேத்திரத்திலிருந்து கொள்ளிடக் கரையிலுள்ள காமாக்ஷிபுரம் என்னும் என்னுடைய ஜனன பூமியாகிய கிராமத்துக்கு ஒரு நாள் சாயங்காலம் பாதசாரியாக அவதூத அவஸ்தையில் வந்தார்கள். அந்த கிராமத்தில் இருந்த தர்ம ஸ்ரீமானும் அன்ன தான தத்பரரும் நித்யௌபாஸன நிரதருமான ஸ்ரீ பஞ்சநதய்யர்வாள் என்ற கிருஹஸ்தர் ஸ்ரீ ஸ்வாமிகளை வரவேற்று மடத்துக்கு அழைத்துச் சென்று வேண்டிய வசதிகளை செய்து கொடுத்தார்கள். அப்போது எனக்கு வயது சுமார் 14 இருக்கும். கிராமத்து பாடசாலையில் ஸம்ஸ்க்ருதம் வாசித்துக்கொண்டிருந்த காலம். ஸ்ரீ பெரியவாளை வந்தனம் செய்யும்படி ஷ்டி கிராமத்து பெரியவர்கள் சொல்ல நான் வந்தனம் செய்து பக்கத்தில் நின்றேன். ஸ்ரீ பெரியவாள் என்னிடம் ஏதாவது தெரிந்த சுலோகங்கள் சொல்லும்படி ஆக்ஞாபிக்க எனக்கு தெரிந்த சில சுலோகங்களை சொன்னேன். அந்த சமயம் பெரியவாள் கொஞ்சகாலம் எங்கள் கிராமத்தில் வாஸம் செய்தார்கள். தினமும் ஸ்ரீ பெரியவாள் ஸ்ரீமத் பாகவதம் பிரவசனம் செய்வார்கள்.

(2) ஒருநாள் பெரியவாள் என்னிடம் ஸ்ரீமத் பாகவத புஸ்தகத்தை அனுக்ரஹித்து கொடுத்து மூலம் வாசிக்கும்படி ஆக்ஞாபிக்க அன்றுமுதல் தினமும் மூலம் பாராயணம் செய்துகொண்டு வந்தேன். எனக்கு பெரியவாள் முதன் முதலில் உபதேசித்தது ஸ்ரீ விஷ்ணு புஜங்கஸ்தோத்திரமும், ஸ்ரீ அய்யாவாள் செய்த ஆர்திஹரஸ்தோத்திரமும் ஆகும். பெரியவாளுடைய பாகவத பிரவசனத்தை தொடர்ச்சியாகக் கேட்டு பெரியவாளுடைய அனுக்ரஹத்தினால் ஸ்ரீமத் பாகவத பிரவசனம் செய்யும் சக்தி ஏற்பட்டு அன்று முதல் இன்று வரை ஸ்ரீ குருசரணங்களை தியானம் செய்துகொண்டு பிரவசனம் செய்துகொண்டு வருகிறேன்.

(3) அவதூதர்களாயிருந்த பெரியவாள் காமாக்ஷிபுரம் ஸ்ரீ பஞ்சநதய்யர்வாள் முதலிய சிஷ்யர்கள் பிரார்த்தித்ததின் பேரில் ஸ்ரீ மகாதேவாசிரமிகள் அவர்களுடைய உபதேசப்படி தண்டமண்டலு ஸ்வீகரித்துக்கொண்டு வேதாந்த பாடம் வாசித்தார்கள்.

(4) கொள்ளிடக் கரையிலுள்ள திட்டச்சேரி கிராமத்தில் பெரியவாள் வசித்து வந்த சமயம் கொள்ளடத்தின் பிரிவான ராஜா வாய்க்காலில் இறங்கி தீர்த்தம் எடுத்துக் கொண்டிருந்தபொழுது ஒரு முதலை காலை பிடித்தது. உடனே ஸ்ரீ பெரியவாள் உச்சஸ்தாயியில், ஹரே ஹரே என்று சொல்ல முதலை விட்டு விட்டது. பரம பாகவதோத்தமாளான பெரியவாளுடைய சரித்திரத்தில் இது ஒரு அத்யத்புதமான சம்பவம் ஆகும்.

ஸ்ரீ பெரியவாளை அனேக வருஷகாலம் ஆராதித்து வந்த சிஷ்யகோடிகள்: காமாக்ஷிபுரம் ஸ்ரீ பஞ்சநதய்யர்வாள், ஸ்ரீ நாராயணசாமி அய்யர், ஸ்ரீ வைத்திநாதய்யர், ஸ்ரீ கிருஷ்ணசாமி அய்யர், சிவனாண்டார் கோயில் ஸ்ரீ ராஜகோபாலய்யர், திருவிசநல்லூர் ஸ்ரீ ராமசுப்பா சாஸ்திரிகள், ஸ்ரீ ராமசந்திர சாஸ்திரிகள், கொண்டசமுத்ரம் ஸ்ரீ கோபாலய்யர் முதலியவர்கள் ஆவார்கள்.

ஸ்ரீ பெரியவாளை பலகாலம் ஆராதித்துவந்த பல சிஷ்ட கிராமங்கள் :

| | |
|---|---|
| காமாக்ஷிபுரம் | ஸ்ரீகண்டபுரம் பாலயூர் |
| வடரங்கம் | காளியாகுடி |
| திட்டச்சேரி | பாவட்டக்குடி |
| மாத்தூர் | விஷ்ணுபுரம் |
| வேப்பத்தூர் | தேதியூர் |
| கோடிமங்கலம் | பரவக்கரை |
| அறயபுரம் | தூத்துக்குடி |
| மாயவரம் | கூத்தனூர் |
| தெப்பிளாம்புலியூர் | ஸ்ரீராமபுரம் |
| அரசவனங்காடு | மேலப்பாலயூர் |
| கோனேரி ராஜபுரம் | ராதாமங்கலம் |
| ஆனந்ததாண்டவபுரம் | சிருகாமணி. |

ஸ்ரீ பெரியவாள் சஞ்சாரம் செய்த பல கிராமங்களில் ஸப்தாஹப்ரவசனங்கள் செய்திருக்கிறார்கள். நான் அனேக ஸப்தாஹத்துக்கு மூலபாராயணம் வாசித்து இருக்கிறேன். இப்படி அனேக வருஷகாலம் பெரியவாளுடன் நெருங்கி பழகும் பாக்யம் எனக்கு கிடைத்தது என் பூர்வ புண்ய பாக்யம் என்றுதான் நினைத்துக்கொண்டிருக்கிறேன்.

ஸ்ரீ பெரியவாளுடைய குரு பரம்பரை பின் வருமாறு :

| | | |
|---|---|---|
| குரு | : | பழயவலத்தில் ஸித்தி யடைந்திருக்கும் ஸ்ரீ பனங்குடி ஸ்வாமிகள் |
| பரமகுரு | : | அறயபுரம் கிராமத்தில் ஸித்தியடைந்திருக்கும் ஸ்ரீ ஸ்வயம்பிரகாசாநந்த ஸரஸ்வதி ஸ்வாமிகள் |
| பராபர குரு | : | கஞ்சனூரில் ஸித்தியடைந்திருக்கும் ஸ்ரீ கோபாலாநந்த ஸரஸ்வதி ஸ்வாமிகள் |
| பரமேஷ்டி குரு | : | கஞ்சனூரில் ஸித்தியடைந்திருக்கும் ஸ்ரீ நாராயணாநந்த ஸரஸ்வதி ஸ்வாமிகள். |

ஸ்ரீ நாராயணாநந்த ஸரஸ்வதி ஸ்வாமிகள் லோகத்துக்கே பிரஸித்தமான வேதாந்த குரு என்றும் மன்னார்குடி மகாமகோபாத்யாய பிரம்மஸ்ரீ ராஜு சாஸ்திரிகள் முதலிய மகான்கள் ஸ்ரீ நாராயணாநந்த ஸரஸ்வதி ஸ்வாமிகளிடம்தான் வேதாந்த பாடம் வாசித்தார்கள் என்ற விபரம் ஸ்ரீ பெரியவாள் சொல்லி நான் கேட்டிருக்கிறேன்.

ஸ்ரீ ஆலங்குடி பெரியவாள் ஸ்ரீமத் பாகவத பிரவசனம் செய்யும் ஸம்பிரதாயம், ஸ்ரீ நாராயணாநந்த ஸரஸ்வதி ஸ்வாமிகளுடைய ஆறு சிஷ்யர்களுக்குள் கடைசி சிஷ்யர்களும் ஸாக்ஷாத் சுகபிரும்மம்போல் ஸ்ரீமத் பாகவத பிரவசனம் செய்தவர்களும், கோவிந்தபுரம் க்ஷேத்திரத்தில் ஸ்ரீ போதேந்திராளுடைய ஸமாதிக்கு பக்கத்தில் சமாதியடைந்தவர்களுமான ஸ்ரீ பாலகிருஷ்ணாநந்த ஸரஸ்வதி ஸ்வாமிகளுடைய பரிபூரண அனுக்ரஹத்தினால் ஏற்பட்டது தான் என்கிற விஷயம் ஸ்ரீ பெரியவாள் சொல்லிக் கேட்டிருக்கிறேன்.

ஸ்ரீ பெரியவாள் எந்த கிராமத்திலிருந்தாலும் பிரதி வருஷமும் ஸ்ரீநிருஸிம்ம ஜயந்தி உத்ஸவத்தை வெகு உத்ஸாஹத்துடன் ஸ்ரீ பிரஹலாத சரித்திரம் கதை சொல்லி வெகு சிரத்தையுடன் நடத்துவார்கள். அப்பேர்ப்பட்ட புண்ய புருஷாள் ஆன பெரியவாளை அந்தியகாலத்தில் அசக்தமான நிலையில் வைத்து ஆராதிக்கும் பாக்யம் முடிகொண்டான் கிராம வாஸிகளுக்கு கிடைத்தது மேற்படி கிராமவாஸிகளுடைய பூர்வ புண்யமென்றே சொல்லவேண்டும்.

ஸ்ரீ நிருஸிம்மமூர்த்தியை உபாஸித்த மகான் முடிகொண்டான் கிராமத்தில் யுவ-ஹு வைகாசி-மீ 4-உ சுக்லபக்ஷ சதுர்தசி திதியில் (ஸ்ரீ நிருஸிம்ம ஜயந்தி தினம்) பிராகிருத சரீரத்தை விட்டு பிரும்மீபூதர்கள் ஆனார்கள். இந்த மகானுடைய ஆராதனை மகோத்ஸவம் பிரதி வருஷமும் பல சிஷ்ய கோடிகளின் ஆதரவினால் வெகு விமரிசையாக நடத்தப்பட்டு வருகிறது.

ஆங்காங்குள்ள எல்லா சிஷ்யகோடிகளும் பிரதி வருஷமும் ஆராதனை மகோத்ஸவத்தில் ஈடுபட்டு பெரியவாளுடைய அனுக்ரஹத்திற்கு பாத்ரர்களாகும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

॥ श्रीरामजयम् ॥

# தென் தேசத்து பிரம்ம நிஷ்டர்கள்.

### வைதிக தர்மரக்ஷக சேங்காலிபுரம் பிரம்மஸ்ரீ அனந்தராம தீக்ஷிதர் அவர்களால் எழுதப்பட்டது.

அதிபால்யத்தில் அளவற்ற வித்யை, அழகிய சரீரம், மங்களமான வாக்கு, நல்ல குடும்ப வசதி, இவ்வளவு இருந்தும் பால்யத்தில் ஸன்யாஸம் செய்துகொண்ட மஹான்கள் ஆலங்குடி ஸ்வாமிகள். இவர்களை தென் தேசத்தில் அறியாதவர்களே இருக்க முடியாது. ஒருமுறை இவர்களை தரிசித்தவர்களுக்கும் ஏதாவது ஒரு ஜன்மாவில் ஸன்யாஸம் நிச்சயம் கிடைத்துவிடும்.

இவர்கள் அபயமான வஸ்துவை உணர்ந்தவர்கள். ஆகையால் இவர்களை தரிசித்தவர்களுக்கு பயம் நீங்கிவிடும். ஸர்வபூதங்களிடத்திலும் தயையுள்ளவர்கள். ஸ்ரீமத்பாகவதத்தை வியாக்யானத்துடன் ஒவ்வொரு ச்லோகத்தையும் அலசிச் சொல்லுவார்கள். இவர்களிடத்தில் ஸ்ரீமத் பாகவத சிரவணம் செய்தவர்களுக்கு அசஞ்சலமான பகவத் பக்தி ஸித்தித்துவிடும்.

பல வருஷங்களுக்கு முன்பு அரசலாறு நதிக்கரையிலுள்ள கூத்தனூர் கிராமத்தைச் சேர்ந்த மடத்தில் ஸ்ரீமத் பாகவதபிரவசனம் ஸ்ரீஸ்வாமிகள் அவர்கள் செய்துகொண்டிருந்தார்கள். ஒரு தினம் எனது ஜேஷ்ட பிதருவியர்களான பிரம்மஸ்ரீ ஸ்வாமிநாத தீக்ஷிதர் அவர்களும் எனது பிதா பிரம்மஸ்ரீ சுப்ரமணிய தீக்ஷிதர் அவர்களும் சிரவணம் செய்ய அங்கு சென்றிருந்தார்கள். நல்ல வெய்யில் வேளை. அந்த சமயத்தில் ஒரு பெரிய ஸர்ப்பம் பக்கத்து புஷ்பத் தோட்டத்திலிருந்து துள்ளி ஓடிவந்து ஸ்ரீஸ்வாமிகள் முன்னிலையில் விழுந்தது. அங்கிருந்த பலர் பயந்து ஓடினார்கள். எங்கள் பெரியவர்கள் இரண்டுபேர்களும் எழுந்து அஞ்ஜலி செய்துகொண்டு நின்றார்கள். ஸ்ரீஸ்வாமிகள் தான் உட்கார்ந்திருந்த பீடத்திலிருந்து எழுந்து நகரவுமில்லை; பிரவசனத்தை நிறுத்தவுமில்லை.

அப்பொழுது சிலர் அந்த ஸர்ப்பத்தை அடிப்பதற்கு தடி கொண்டுவந்தார்கள். ஸ்ரீஸ்வாமிகள் அவர்களைப் பார்த்து “நீங்கள் அடித்துவிடுவீர்கள் என்று பயந்துதானே அது என் பீடத்திற்கு கீழ் பயந்து வந்திருக்கிறது. அந்த ஸர்ப்பத்தை அடிக்கக்கூடாது” என்று தடுத்துவிட்டார்கள். பிரவசனம் முடிந்ததும் ஸ்ரீஸ்வாமிகள் அவர்களே தனது பீடத்தை எடுத்தார்கள். ஆனால் அங்கு ஸர்ப்பத்தை காணோம். (இதை எங்கள் பெரியவர்கள் சொல்லி நான் கேட்டறிந்திருக்கிறேன்.) இப்படிப்பட்ட மஹான்கள் என்னை ஒருதரம் ஸ்ரீபகவத்குணம் சொல்லி கேட்கவேண்டுமென்று தாப்பிளாம்புலியூர் வரும்படி உத்திரவிட்டார்கள். அவர்களுடைய ஆக்ஞையை சிரஸினால் தரித்து நான் சென்னையிலிருந்து தெப்பிளாம்புலியூர் சென்றேன். நான் காலை 8 மணிக்கு ஸ்நானம் முதலியவைகளை முடித்துக் கொண்டு மடத்தில் போய் தரிசனம் செய்தேன். அதற்கு முன்பு அவர்களை தரிசித்தது இல்லை. ஆனால் ஸ்ரீஸ்வாமிகள் அவர்கள் என்னை நீங்கள்தானே அனந்தராம தீக்ஷிதர் என்று கேட்டார்கள். நான் உடனே ஆச்சரியப்பட்டு நான் “இதுவரை தங்களை தரிசனம் செய்ததில்லையே, என்னை தங்களுக்கு எப்படி தெரிந்தது?” என்று கேட்டேன். அதற்கு பதில் கூறுகையில் “வெகுநாளாய் தங்களைப் பார்க்கவேண்டுமென்று ஸ்மரித்த ஸ்மரணமே தங்களை இன்னார் என்று சொல்லிற்று” என்றார்கள். உடனே ஸ்ரீஸ்வாமிகள் அவர்கள் என்னை ஸ்ரீ மஹாபாரதத்தில் ஸஞ்ஜயன் தூது என்ற புண்ய சரிதத்தை சொல்லும்படி உத்திரவு இட்டார்கள். நான் பிரவசனம் ஆரம்பித்தேன். ஸ்வல்ப ஜனங்கள்தான் அங்கு இருந்தார்கள். சற்று பொறுத்து அந்த கிராமத்திலுள்ள ஸ்திரீ புருஷர்கள் குழந்தைகள் முதல் அங்கு வந்துவிட்டார்கள். இதுவும்

ஸ்ரீஸ்வாமிகள் அவர்களுடைய தபஸ்ஸே ஆகும். அன்று பகல் 3 மணிக்கு ஸ்ரீமத் பாகவத பிரவசனத்தை ஸ்ரீஸ்வாமிகளை சொல்லும்படி நான் பிரார்த்தித்தேன். உடனே ஸ்ரீஸ்வாமிகள் சுருதிகீதையில் முதல் ச்லோகமாகிய

**जयजय जह्यजां अजितदोष गृभीतगुणाम्**

என்ற ஒரு ச்லோகத்தை ஒரு மணி நேரம் அவதாரிகை வைத்து உபதேசித்தார்கள். அவர்கள் செய்த பிரவசனம் இன்னும் காதில் ஒலித்துக்கொண்டிருக்கிறது. மிக அசக்தமான அந்த வயதில் அப்படி உபன்யஸித்ததைப் பார்த்து, கேட்டு ஆச்சரியப்பட்டேன்.

இப்படிப்பட்ட புண்ய புருஷாள் யுவ வருஷம் வைகாசி மாதம் சுக்லபக்ஷம் சதுர்தசி திதியில் முடிகொண்டான் கிராமத்தில் பாஞ்ச பௌதிகமான சரீரத்தை விட்டுவிட்டு ஜோதிர்மயமாய் எங்கும் விளங்குகிறார்கள். இவர்களுடைய சமாதியில் பிரதி வருஷமும் மஹாபக்தராகிய எனது ஆப்த மித்ரன் ஸ்ரீ ஆலங்குடி வெங்கடநாராயணய்யர் நான்கு வேத பாராயணங்களுடன் பூஜை முதலிய வைபவங்களுடன் பல பக்தகோடிகள் உதவியினால் ஆராதனை மஹோத்ஸவத்தை முறைப்படி நடத்தி வருகிறார்கள். இந்த மஹான்களின் ஆராதனை பிரதி வருஷம் வைகாசி மாதம் சுக்லபக்ஷம் சதுர்தசி திதியில் நடந்துவருகிறது. ஆஸ்திகர்கள் அந்த சமயத்திலாவது அங்கு சென்று ஸமாதி தர்சனம்செய்து க்ஷேமத்தை அடையவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

---



ஸ்ரீராமஜெயம்

# புண்ணிய நினைவுகள்.

[ஆனந்ததாண்டவபுரம் ஸ்ரீ பட்டாபிராமய்யர் அவர்களால் எழுதப்பட்டது]

அஜாமிளனைக் கொண்டுவரச்சென்ற யம படர்கள் வெறும் கையுடன் திரும்பிவந்து யமன் காலில் விழுந்தார்கள்.

"என்? விஷ்ணு தூதர்கள் ஏதாவது தகராறு செய்தார்களோ?" என்று யமன் கேட்டான்.

"ஆமாம். அது தங்களுக்கு எப்படித் தெரியும்?" என்று ஆச்சரியத்துடன் வினவினார்கள் கூற்றுவனின் கிங்கரர்கள்.

"நல்ல வார்த்தை சொல்லிப்பார்த்து கேட்காவிட்டால் கதாயுதத்திற்கு வேலைகொடுப்பவர்கள் விஷ்ணு தூதர்கள். சிவ தூதர்களாக இருந்தால் அடித்த பிறகுதான் பேச்சைத் துவக்குவார்கள். நான் அங்கே வந்து உங்கள் நிலையைப் பார்த்த பிறகு, "என் இப்படி அடித்துவிட்டீர்கள்?" என்று கேட்டுக்கொண்டால், எங்களைச் சேர்ந்தவனிடம் வாலையாட்டினார்கள் என்று பதில் சொல்லுவார்கள். **जम्भयन्नभ्यवोचत्** என்கிறது ஸ்ரீருத்ரம். கைகால் ஒடியாமல் நானிருக்கும் இடம் வரையில் நீங்கள் வந்திருப்பதைப் பார்த்தால் விஷ்ணு தூதர்களிடம் ஏதோ பேச்சு நடந்திருக்க வேண்டும் என்று நினைத்தேன்" என்றானும் யமன்,

இது ஆலங்குடி பெரியவாள் கதை சொல்லும் முறை. அவர்கள் கூறும் ஹரிகதையில் சிவ மகிமை நிறைந்து நிற்கும். அதுதானே பாகவதம் காட்டும் வழி?

## " करौ च तन्मन्दिरमार्जनादिषु "

ஆழி சூழ் உலகிற்கு அதிபதி அம்பரீஷன். அவன் தன்னுடைய கைகளாலேயே பகவானுடைய பூஜா கிருஹத்தை சுத்தம் செய்வானாம்.

இந்த இடம் கதை சொல்லும்போது ஸ்வாமிகள் குரலில் வழக்கத்தைவிட அழுத்தம் கொஞ்சம் கூடவே இருக்கும். அவர்கள் சொல்லுவார்கள்,

"வருஷத்திற்கு ஆறு கலம் கொடுத்து ஒரு பூஜா பட்டனை வைத்துக்கொள்ளத் தெரியவில்லை அசட்டு அம்பரீஷனுக்கு.

பகவானைத் தொட்ட கை பகவத்தாமாக—செல்வம் செறிந்ததாக—ஆகிறது என்று கூறுகிறது வேதம்.

## " अयं मे हस्तो भगवानयं मे भगवत्तरः "

பகவானைத் தொட்ட கையால் எடுத்துக்கொடுத்த விபூதி தீர்க்காத ரோகம் கிடையாது. கூலிக்குப் பூஜை செய்பவனை சிராத்தத்திற்கு சொல்லாதே என்கிறது தர்ம சாஸ்திரம். தானும் கெட்டுப் பிறரையும் கெடுக்கும் தந்திரம் அம்பரீஷனுக்குத் தெரியவில்லை. அவன் பட்டரைக் கொண்டு பூஜை செய்யாமல் தானே பகவானை ஆராதித்தான்."

ஸ்ாவமிகளுடைய இந்த வார்த்தைகள் ஸ்வயம் பூஜை செய்யாதவர்களைக் குத்துவது போல்தான் இருக்கும். அந்தக்காலத்தில் பூஜை செய்ய ஆரம்பித்தவர்கள் எத்தனையோ பேர்.

ஸ்வாமிகளுடைய ஸப்தாஹம் கேட்டால் அப்புறம் அந்த மனிதன் புது மனிதன்தான். ஸ்வாமிகள் வார்த்தைகள் அவன் மனதைத் தொடும்போதே அதில் ஹரிபக்தியை குடியேற்றிவிடும்.

நம் ஊரில் வந்து தங்கவேண்டும் என்று யாராவது விண்ணப்பித்துக்கொண்டால் "ஸப்தாஹம் நடத்தவீர்களா? நடத்துவதானால் வருகிறேன்" என்று கூறுவார்.

இன்றைக்கும், ஸ்வாமிகளை நினைத்துக்கொண்டால் — ஒரு குளத்தங்கரை — அதன் கரையில் ஒரு மடம் — சாந்தமான சூழ்நிலை — அங்கே பத்துப் பதினைந்துபேர் விபூதி தரித்துக்கொண்டு இடுப்பில் கட்டிய வேஷ்டியுடன் மரியாதையாக உட்கார்ந்திருக்கிறார்கள் — ஸ்வாமிகள் ஏதோ நல்ல விஷயம் உபதேசம் செய்கிறார் — இந்தக் காட்சிதான் மனதில் தோன்றுகிறது.

ஸ்வாமிகளை எவ்வளவு நாள் வைத்து ஆராதித்தாலும் சிரமமே தெரியாது. அவ்வளவு இங்கிதம் தெரிந்தவர்கள். நம்மால் பிறருக்கு சிரமம் உண்டாகக்கூடாது என்ற எண்ணம் அவர்கள் மனதில் எப்போதும் இருக்கும்.

ஒருசமயம் என்னுடைய வீட்டில் ஆபிசார பிரயோகத்தால் சிரமம் நேரிட்டபோது ஆலங்குடி பிரம்மஸ்ரீ கோதண்டராமஸ்வாமி அவர்களை (ஸ்ரீ எ. கே. வெங்கடநாராயணன் அவர்களுடைய தகப்பனார்) எனக்கு ந்ருஸிம்ம மந்திரத்தை உபதேசம் செய்யச் சொல்லி எனக்கிருந்த சிரமத்தைப் போக்கினார். இம்மாதிரி அவர்கள் கிரஹஸ்தர்களுக்கு செய்த நன்மைகள் பல பல.

அவர்களைப்பற்றிய நினைவுகளால் என்னுடைய மனம் எவ்வளவோ சாந்தி அடைகிறது. பரிசுத்தமாய்விட்டோம் என்ற உணர்ச்சி மேலிடுகிறது. ஆலங்குடி ஸ்வாமிகளுடைய அனுக்ரஹம் இருந்தால் உண்மையான ஹரிபக்தி நமக்கு உண்டாவதில் ஸந்தேகமே இல்லை.

स्वयंप्रकाशानन्दश्रीसरस्वत्यभिधान् गुरून् ।
सततं भावये नारसिंहाध्युषितहृद्गुहान् ॥